# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம்

*[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*
*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

1993, ஏப்பிறில் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 60 தபாற் செலவு : ரூபா 1.00

1993 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம்.

[1993, மார்ச் மாதம் 31 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ 70/90
3059

குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, குடிவருவோர், குடியகல்வோர் (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) குடிவருவோர், குடியகல்வோர் சட்டத்தின் 45ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 357 ஆம் அத்தியாயத்தின் 45ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற; அல்லது" என்னும் சொற்களுக்குப்பதிலாக, "தடுக்கின்ற அல்லது தடைசெய்கின்ற" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை, பந்தி (ச) என மீளவிலக்கமிடுவதன்மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(ஐ) பிரயாண ஆவணமொன்றை வைத்திருப்பவரும் இலங்கைக்கு வெளியே வதிபவருமாக இருந்து கொண்டு கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி அத்தகைய பிரயாண ஆவணத்தை தபால் மூலமோ அல்லது வேறோர் ஆள் மூலமாகவோ இலங்கையில் வதிகின்ற ஆளொருவருக்கு அஞ்சல் செய்கின்ற அல்லது அனுப்புகின்ற;

(ஒ) பிரயாண ஆவணமொன்றை வைத்திருப்பவரும் இலங்கையில் வதிபவருமாக இருந்துகொண்டு, கட்டுப்பாட்டாளரின் எழுத்திலான முன் அங்கீகாரமின்றி அத்தகைய பிரயாண ஆவணத்தைத் தபால் மூலமாகவோ, அல்லது வேறோர் ஆள் மூலமாகவோ இலங்கைக்கு வெளியே வேறொரு நாட்டில் வதிகின்ற ஆளொருவருக்கு அஞ்சல் செய்கின்ற அல்லது அனுப்புகின்ற;

(ஓ) அவருக்கு வழங்கப்பட்டதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான ஒன்றுக்கு மேற்பட்ட பிரயாண ஆவணங்களைத் தமது உடைமையில் வைத்திருக்கின்ற;

(ஔ) அவருக்கு வழங்கப்பட்டதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான பிரயாண ஆவணமொன்றைத் தமது உடைமையில் வைத்துக்கொண்டு பிரயாண ஆவணமொன்று வழங்கப்படுவதற்கென விண்ணப்பிக்கின்ற;

(க) சட்டபூர்வமான அதிகாரமின்றி வேறு எவரேனும் ஆளின் பிரயாண ஆவணமொன்றை தமதுடைமையில் வைத்திருக்கின்ற;

(ங) அத்தகைய ஆளுக்கு வழங்கப்பட்ட பிரயாண ஆவணமொன்றைத் தடுத்துவைப்பதற்கென 51இ என்னும் பிரிவின்கீழ், ஆக்கப்பட்ட கட்டளையொன்று முடிவுறுதிருக்கும்பொழுது இன்னுமொரு பிரயாண ஆவணம் வழங்கப்படுவதற்கென விண்ணப்பிக்கின்ற ;".

(ஈ) "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல்" என்னும் சொற்களிலிருந்து அவ்வுட்பிரிவின் இறுதிவரையிலான எல்லாச் சொற்களுக்கும் பதிலாக, "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் ஐம்பதினாயிரம் ரூபாவை விஞ்சாததுமானவொரு குற்றப்பணத்திற்கு அல்லது ஆறு மாதங்களுக்குக் குறையாததும் ஐந்து ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனைக்கு அல்லது அத்தகைய குற்றப்பணம், மறியற்றண்டனை ஆகிய இரண்டிற்கும் ஆளாதலும் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(5) இப்பிரிவில் 'பிரயாண ஆவணம்' என்னும் சொல்லமைப்பு 1956 ஆம் ஆண்டின் குடிவருவோர் குடியகல்வோர் ஒழுங்குவிதிகளின் கீழ் வழங்கப்பட்ட ஓர் இலங்கைக் கடவுச்சீட்டு அல்லது ஓர் அவசரச் சான்றிதழ் அல்லது ஆணையாளர் சான்றிதழ் என்று பொருள்படும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 51இ என்னும் புதிய பிரிவை

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 51ஆ என்னும் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் பிரிவு 51இ என்றுறப்போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"குற்றஞ் சாட்டப்பட்டவரின் சந்தேக நபரின் அல்லது சாட்சியின் வருகையைப் பெறுவதற்காக நீதிமன்றம் பிரயாண ஆவணத்தைத் தடுத்து வைக்கலாம் என்பது.

51இ. (1) ஏதேனும் சட்டத்தின்கீழ் ஏதேனும் தவறுதொடர்பிலான ஏதேனும் நடவடிக்கையில் குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரின் அல்லது ஒரு சந்தேக நபரின் வருகை அல்லது சாட்சியொருவரை விசாரணைசெய்தல் அவசியமானதென நீதிமன்றத்திற்குத் தோன்றும் பொழுதிலெல்லாம், அது அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவரின் அல்லது சந்தேகநபரின் வருகையைப் பெறுவதற்கு அல்லது அத்தகைய சாட்சியை விசாரணை செய்வதற்கு அவசியமானதென அது கருதக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு விடயத்திற்கேற்ப அத்தகைய குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு, சந்தேகநபருக்கு அல்லது சாட்சிக்கு வழங்கப்பட்டதும் அப்போதைக்கு வலுவிலுள்ளதுமான ஏதேனும் பிரயாண ஆவணத்தைத் தடுத்துவைக்கலாம். எவரேனும் ஆளுக்கு வழங்கப்பட்ட பிரயாண ஆவணமொன்றைத் தடுத்து வைத்து இப்பிரிவின் கீழ் கட்டளையொன்றை ஆக்கும் ஒரு நீதிமன்றமானது அத்தகைய கட்டளையின் பிரதியொன்று கட்டுப்பாட்டாளருக்கு அனுப்பப்படச் செய்வித்தல் வேண்டும்.

(2) இப்பிரிவில் 'பிரயாண ஆவணம்' என்பது 1956ஆம் ஆண்டின் குடிவருவோர் குடியகல்வோர் ஒழுங்குவிதிகளின்கீழ் வழங்கப்பட்ட ஓர் இலங்கைக் கடவுச்சீட்டு அல்லது ஓர் அவசரச் சான்றிதழ் அல்லது ஆளடையாளச் சான்றிதழ் என்று பொருள்படும்.".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.